JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 417/2024 |
| | : | Prosecution P.W - 3 |
| NAME | : | ராஜ் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thurssday 27.11.2025.

முதல் விசாரணை

நான் தற்போது ஆழ்வார்குறிச்சியில் குடியிருந்து வருகிறேன். நான் தையல் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி பொன்னையாவை எனக்கு தெரியும். எதிரிகள் முத்துப்பாண்டி, அங்கயற்கண்ணி, கனகவள்ளி ஆகியோர்களை தெரியும். அசா.1 பிச்சம்மாள் என் அத்தை, அசா.2 சுரேஷ் என் உடன்பிறந்த தம்பி. கடந்த 11.03.2020 ம் தேதி நான் என்னுடைய கடையில் இருந்தேன். அங்குள்ளவர்கள் என்னிடம் வந்து என் அத்தையை எதிரி முத்துப்பாண்டி பொன்னையா மற்றும் அவர்கள் குடும்பத்தில் உள்ளவர்கள் அடித்ததாக தகவல் சொன்னார்கள். பின்னர் நான் என் அத்தையை அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனையில் சென்று பார்த்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

என் அத்தையை அடித்தது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். காவல்துறையினர் என்னை விசாரிக்கும் போது எனக்கு யார் தகவல் சொன்னார்கள் என்று நான் சொன்னேன் என்றால் நான் சொல்லவில்லை. அசா.1 பிச்சம்மாளின்மகளை தான் நான் திருமணம்

செய்துள்ளேன். என்னை காவல்துறையினர் எங்குவைத்து விசாரித்தார்கள் என்றால் நான் அம்பை போன இடத்தில் வைத்து விசாரித்தார்கள். நான் சொல்வது போல் எந்த வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எங்கள் குடும்பத்திற்கும், ஆஜர் எதிரி குடும்பத்திற்கும் உள்ள முன்பகையை வைத்து அதன் காரணமாக என் அத்தை பொய் புகார் கொடுத்து பொய்யாக இந்த வழக்கு பதிவு செய்யபட்டுள்ளது என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 417/2024 |
| | : | Prosecution P.W - 2 |
| NAME | : | சுரேஷ் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thurssday 27.11.2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆழ்வார்குறிச்சியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி பொன்னையாவை தெரியும். என் அத்தை வீட்டின் பக்கத்து வீட்டுக்காரர். எதிரிகள் முத்துப்பாண்டி, அங்கயற்கண்ணி, கனகவள்ளி ஆகியோர்களை தெரியும். அசா.1 பிச்சம்மாள் எனது அத்தை. கடந்த 11.03.2020 ம் தேதி காலை 10.30 மணிக்கு ஆஜர் எதிரி சொத்து பிரச்சினை காரணமாக என் அத்தை வெளியே வெந்நீர் போட்டு கொண்டிருந்ததால் சுவரெல்லாம் கரியாகிறது என எதிரி பிரச்சினை செய்துள்ளார். அதனால் என் அத்தையை பிடித்து கீழே தள்ளி ஆஜர் எதிரியும், அவரது அண்ணனும் என் அத்தையை பெண் என்றும் பாராமல் அடித்துள்ளார்கள். மற்ற எதிரிகளும் என் அத்தையை அடித்தார்கள். என் அப்பா சுப்பையா என் அத்தையை அடித்ததாக தகவல் சொன்னார். பின்னர் நான் இரண்டுமணி நேரம் கழித்து என் அத்தையை ஆட்டோ மூலம் அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். மறுநாள் போலிசார் அங்கு வந்தார்கள். போலிசாரிடம் என் அத்தை சொன்னார். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள

அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையது தான் போலிசார் என்னை விசாரித்தனார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

என் அத்தையை அடித்ததாக சொல்வது எனக்கு நேரில் தெரியாது என்றால் சரிதான் சொல்லி தான் தெரியும். நான் அரசியல் கட்சியில் இருக்கும் ஒரு அரசியல் பிரமுகர் என்றால் சரிதான். நான் அரசியல் பிரமுகர் என்பதாலும், காவல்நிலையத்தை ஒட்டி என் வீடு உள்ளதாலும் காவல்துறையினர் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரியல்ல. புகாரில் என்ன எழுதி உள்ளது என்று எனக்கு தெரியும். அந்த புகாரில் சம்பவ சமயம் என் அத்தை வீட்டில் என் அப்பா இருந்ததாக சொல்லி உள்ளாரா என்றால் சொல்லி இருப்பார். என்னை எந்த காவல்அதிகாரி விசாரித்தார் என்றால் காவல் உதவி ஆய்வாளர் விசாரித்தார். காவல் நிலையத்தில் நான் மனு கொடுக்கும் போது காவல் உதவி ஆய்வாளர் இருந்தார். அறிவேன் சாட்சி கையொப்பம் ஏட்டு வாங்கினார். சம்பவம் நடந்து ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரத்தில் காவல்நிலையம் சென்றோம். புகார் மனு நாங்கள் தான் எழுதினோம். புகார் மனு கொடுத்து விட்டு தான் மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் சரிதான். நான் சொன்னது போல் சொன்னநேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் என் அத்தைக்கும், எதிரிகளுக்கும் உள்ள முன்பகை காரணமாக என் அத்தை பொய்புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 417/2024 |
| | : | Prosecution P.W - 1 |
| NAME | : | பிச்சம்மாள் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thurssday 27.11.2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆழ்வார்குறிச்சியில் குடியிருந்து வருகிறேன். நான் வயது முதிர்வு காரணமாகவேலை எதுவும் பார்க்கவில்லை. ஆஜர் எதிரி பொன்னையாவை தெரியும். எதிரிகள் முத்துப்பாண்டி, அங்கயற்கண்ணி, கனகவள்ளி, ஆகியோர்களை தெரியும். கடந்த 5 வருடங்களுக்கு முன்பு மாசி மாதம் கடைசியில் காலை 9 மணியளவில் என் வீட்டின் பிரவாசலில் நான் வெந்நீர் வைத்து விட்டு வெண்ணீர் பானையை வைத்து விட்டு வீட்டிற்குள் வந்து விட்டேன். பின்னர் சடசடவென சத்தம் கேட்டது. நான் சென்று பார்த்தபோது எதிரி பொன்னையா என் வீட்டு சுவர் கரியாகிறது. தேவுடியா, கண்டாரவோலி உன்னாலே தான் என் வீடு வம்பா போகிறது என சத்தம் போட்டார். பின்னர் அங்கு இருந்து 1வது எதிரியின் மனைவி கனகவள்ளி கம்பியை கொண்டு என்னுடைய வலது கன்னத்தில் அடித்தார். அதில் எனக்கு இரத்தம் வந்தது. என் அண்ணன் சுப்பையா என் வீட்டிற்குள் இருந்தார். சத்தம் கேட்டு அவர் வந்ததும் எதிரிகள் அங்கயற்கண்ணி மற்றும் முத்துபாண்டி ஆகியோர்களும் சேர்ந்து கீழே கிடந்த கம்பை எடுத்து என்னுடைய வலது கால் முட்டியில் அடித்தார்கள்.

பின்னர் என் அண்ணன் சுப்பையாவை கண்டதும் எதிரிகள் சென்றுவிட்டார்கள். என் அண்ணன் சுப்பையா என்னை அழைத்து சென்றார். நான் வெட்கப்பட்டு மருத்துவமனைக்கு செல்லவில்லை. பின்னர் இரவு 9 மணிக்கு மேல் வேதனை தாங்காமல் அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். பின்னர் போலிசார் அங்கு வந்தார்கள். நான் நடந்த விவரத்தை போலிசாரிடம் கூறினேன். அவர்கள் எழுதி கொண்டு என்னிடம் படித்து காண்பித்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். மேற்படி புகார் வாக்குமூலம் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சிகள் சுப்பையா, சுரேஷ், ராஜ், ஆகியோர்களை எனக்கு தெரியும். நான் என்னுடைய வீட்டில் தனியாக தான் இருக்கிறேன். என்னுடன் யாரும் கிடையாது. போலிசார் என்னை விசாரித்தனார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

என் வீட்டில் 50 ஆண்டுகளாக குடியிருக்கிறேன். எனக்கும், எதிரிக்கும் 10 வருடமாக நிலம் சம்பந்தமாக பிரச்சினை இருக்கிறது என்றால் சரிதான். என் அண்ணன் சுப்பையா என் உடன்பிறந்த அண்ணன் என்றால் சரிதான். சுரேஷ், ராஜ் என் அண்ணன் மகன்கள். காவல்நிலைய விசாரணையில் என் அண்ணன் உடன் இருந்ததாக சொன்னேனா என்றால் சொன்னேன். புகார் மனுவில் என் அண்ணன் சுப்பையா என் வீட்டில் இருந்ததாக எழுதபட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக நான் எத்தனை முறை காவல்நிலையம் சென்றேன் என்றால் காவல்நிலையம் செல்லவில்லை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். என்னை விசாரித்த விசாரணை அதிகாரியின் பெயர் தெரியாது. என்னை விசாரணை செய்யும் போது என்னுடன் எத்தனை காவல்அதிகாரிகள் இருந்தார் என்றால் ஒருத்தர் தான் வந்தார். அந்த ஒரு காவல் அதிகாரியை தவிர வேறு யாரும் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். என்னை விசாரித்த காவல்அதிகாரி ஆண் காவல் அதிகாரி. சம்பவம் நடந்ததும் என் அண்ணன் வீட்டிற்கு சென்றேன் என்றும் எனக்கு வெட்கமாக இருந்ததால் காவல்நிலையம் செல்லவில்லை என்றும் போலிசாரிடம் சொன்னேனா என்றால் இல்லை.

சம்பவ இடத்தை சுற்றி நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். சம்பவத்தை நிறைய நபர்கள் பார்த்த விவரத்தை சொன்னேனா என்றால் சொல்லவில்லை. சம்பவத்தை வீட்டை சுற்றி உள்ள நிறைய நபர்கள் பார்த்தார்கள் என்றால் சரிதான். முத்துப்பாண்டி என்பவர் அரசு வேலை பார்க்கிறார் என்றால் சரிதான். அவர் பரமகல்யாணி பள்ளியில் ஆசிரியராக வேலை பார்க்கிறார். சம்பவம் நடந்ததாக சொல்லும் அன்று

முத்துப்பாண்டி பள்ளியில் வேலை பார்த்தார் என்றால் பள்ளிக்கூடம் போக வேண்டிய நேரத்தில் தான் வந்தார்கள். நான் மருத்துவமனையில் 3 நாட்கள் இருந்தேன். போலிஸ் விசாரணையில் நான்கு பேரும் ஆளுக்கொரு கட்டையை வைத்துஅடித்ததாக சொன்னேனா என்றால் இல்லை. எதிரிகள் மீது ஆழ்வார்குறிச்சி காவல்நிலையத்தில் இதற்கு முன்பு புகார் கொடுத்தேனா என்றால் 35 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு முறை முத்துப்பாண்டி மீது புகார் கொடுத்தேன். எனக்கும் எதிரிக்கும் இருந்த முன்பகையை வைத்து அவரை பழிவாங்கும் நோக்கோடு நான், என் அண்ணன் மற்ற அனைவரும் சேர்ந்து திட்டம் போட்டு ஆழ்வார்குறிச்சி காவல்நிலையத்தில் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

என் வீட்டிற்கு பின்புறம் உள்ள கிணறு பொதுவாக எல்லோரும் பயன்படுத்தக்கூடிய பஞ்சாயத்து கிணறு என்றால் சரிதான். நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எங்களுக்குள் உள்ள முன்பகையை வைத்து எதிரிகளை பழிவாங்க வேண்டும் என்று பொய்யாக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

.